# தாய்மையின் மேன்மை-செவிலி

*முனைவர். செ. ரேவதி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
சிவந்தி கலை (ம) அறிவியல் கல்லூரி
பிறைகுடியிருப்பு, உடன்குடி
தூத்துக்குடி மாவட்டம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5031

### முன்னுரை

அகமாந்தர் கூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் உளவியலோடு பொருந்தி வருகின்றன. அகமாந்தர்களின் ஒருவரான செவிலித்தாய் களவு வாழ்வில் சிறப்புத் தோற்றமாக இடம் பெறுகிறாள். களவுக் காலத்தில் தலைவி தலைவனோடு உடன்போக்கு சென்றதை நினைத்துச் செவிலித்தாய் உள்ளம் வருந்துவதை உளவியல் மற்றும் சமூகவியல், பிற அறிஞர்கள் கருத்தோடு பொருந்தப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### களவு-இலக்கணம்

திருமணத்திற்கு முற்பட்ட ஒழுக்கம் களவு எனப்படும். களவானது பிறப்பு முதலியவற்றால் ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் தாமே ஒருவரையொருவர் எதிர்பட்டுக் கூடியொழுகும் ஒழுக்கம் ஆகும். இது தலைவன் தலைவியை பெற்றோர் கொடுப்பக் கொள்ளாது. அவர் அறியா வகையில் மறைந்த உள்ளத்தோடு கூடுதலின் களவெனப்பட்டது.

தலைவனும் தலைவியும் திருமணத்திற்கு முன்பு கண்டு கூடி இன்புற்று வாழ்வதனைக் களவியல் எனலாம். இதனை,

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டங் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்பொழ்த் துண்மையோர் இயல்பே"**

(புலவர். மு.தாசன், தொல்காப்பியக்களஞ்சியம், பொருளதிகாரம், நூற். 89)

என்கிறது தொல்காப்பியம்.

### செவிலித்தாய் கடமைகள்

தலைவியைச் சிறுவயதிலிருந்தே வளர்ப்பவள் செவிலித்தாய். தலைவியைப் பாலூட்டி வளர்க்கும் நிலைக்குப் பிறகும் உணவுட்டும் செயலைத் தன் கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றாள். தலைவியின் உடல் வளர்ப்பு நிலையில் மட்டுமின்றி அவளது புதிய குடும்ப அமைப்பிலும் செவிலித்தாய் முக்கியப் பங்கேற்கின்றாள். தலைவியை நன்கு ஆராய்ந்து உணர்ந்து அரிய மறைப்பொருளை எல்லாம் குறிப்பால் அறிந்து கூறுபவள் செவிலி என்பதால் தாய் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறாள். இதனை,

**"ஆய்பெடுஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்**
**தாய் எனப் படுவோன் செவிலி யாகும்"**

என்ற அடிகளில் அறியலாம்.

(புலவர். மு.தாசன், தொல்காப்பியக் களஞ்சியம், பொருளதிகாரம், நூற். 122)

அறிதற்கரிய மறைப்பொருளை எடுத்துக் கூறுதல் அவளிடத்ததாதலின் தாய் எனக் கூறப்படுபவள் செவிலியே என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

### செவிலித்தாயின் வாழ்வியல் முறை

தலைவிக்கு உயிருக்கு ஒத்தவளாகவும், அறிவிற் சிறந்தவளாகவும், தோழியைப் பெற்றெடுத்துப் பெருமை சார்நதவளாகவும், தலைவியின் மீது மிகுந்த அன்பு கொண்டவளாகவும், தலைவி, தலைவன் மீது கொண்ட காதலை நற்றாய்க்குத் தெரிவிப்பவளாகவும், உடன் போக்கில் சென்ற தலைவியைத் தேடித் திரிபவளாகவும், தலைவியின் இல்லற மாண்பைக் கண்டு அதனை நற்றாயிடம் கூறுபவளாகவும், செவிலி சித்திரிக்கப்படுகின்றாள். இச்செய்திகளெல்லாம் செவிலிக் கூற்றுக்கள் வாயிலாகவே நமக்குத் தெரிய வருகின்றது.

இதனை

"தலைவியின் பால் காதலை முன்பே அறியாமல் போனதை நினைத்து வருந்தி தன் நெஞ்சிற்குச் சொல்லியது. (குறுந்: 84) (அகம். 49, 203).

### செவிலியின் புலம்பல்

உடன்போக்கிற் சென்ற தன் மகளின் மெல்லியடிகளாய் அவள் தான் வெஞ்சுரத்தை எவ்வாறு கடந்து செல்வாளோ என்ற ஏக்கத்தின் காரணமாகத் தாய் தன் மகளை நினைத்துப் புலம்பியபடி கண் கலங்குதலை,

**"கோதை மயங்கினும் குறுந்தொடி நெகிழினும்**
**காழ்பெயல் அங்குற் காசுமுறை திரியினும்**
**மாண்நலம் கையறக் கலுழும்"(நற்: 66)**

என்ற அடிகள் வழி அறியலாம்.

செவிலி தன் மகளின் இளமையை நினைத்து வருந்துகிறாள். வளரிளம் பருவத்தில் மாலையை முறை செய்யவும், ஆடையைச் சரி செய்யவும் இயலாத அறியாமை கையற்ற அழுகைக்குக் காரணம் ஆகின்றது.

### செவிலியின் அச்சம்

செவிலி தலைவியை வளராத குழந்தையாகவே கருதுகின்றாள். மகள் வளர்ந்து விட்டால் தன்கேற்ற துணையைத் தேடித் தெரிந்து அவன்பின் செல்ல துணிந்து விட்டாள் என்பதைச் சொல்லாமல் சொல்வது போல் உடன்போக்கு நேர்ந்து விட்டது. இதனை.

**"ஒன்றினவோ அவள் அஞ்சிலம் படியே"**
**(ஐங்: 389)**

**"மெல இயல் வல்லுநர் கொல்லோ தானே"**
**(அகம் 153)**

என்ற வாரிகள் உணர்த்துகிறது.

தலைவன் தலைவி உடன்போன இடத்தில் வருவோரை வினவியது அவர்களும் கண்டதை உரைத்தனர். அதுகேட்ட செவிலித்தாய் அவள் மெல்லிய அடிகள் எவ்வாறு அச்சுரத்திடையே நிலத்திற் பொருந்தினவோ? என் மகள் தோழியர்களுடன் வந்து

விளையாடும் போது சிறிது தூரம் சென்றதும் கால் வலியில் துன்பப்படுவாளே எப்படி சென்றாளோ? என்று செவிலித்தாய் அதிர்ச்சியும் அச்சமும், மகள் வாழ்வு பற்றி கவலையும் ஒன்றாகக் கலப்பதால் பெரும் துயரம் அடைவதாக இப்பாடல் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

**செவிலியின் வருத்தம்**

தலைமகள் எய்திய பருவ வளர்ச்சியும் அவளது புதிரான ஒழுக்கவாறுகளும், தாயின்று அகன்றொழுகும் அவள் நிலையை அறிந்தும், முன்னர் அதனைப் புரிந்து கொள்ளாத தன் அறியாமையே என்று சொல்லி வருந்துகிறாள்.

***"இனி அறிந்தேன் அதுதுனி ஆகுதலே***
***கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்***
***வேங் கையும் காந்தருளும் நாறி***
***அம்பல் மலரினும் தான் தண்ணியனே"***

***(குறுந். 84)***

என்ற பாடலின் வழி செவிலித்தாய் தலைவி பருவம் எய்தினாள் என அறிந்த பின்னும் தனது அறியாமையால் அவளை இற்செறியாது ஒழித்தேனே. தன்னிடமிருந்து அகன்றொழுகும் நிலையினையும் புரிந்து கொள்ளாத தனது அறியாமையை எண்ணி வருந்துவதைக் காண முடிகிறது.

இவ்வாறு தலைமைகளின் உடன் போக்கிற்குத் தாயின் அறியாமை கூட காரணமாகிறது. தலைவி மணப்பருவம் வந்தபோதும் செவிலித்தாயின் பொறுப்பு பன்மடங்காகிவிடும். தலைவியின் ஒழுக்கலாறு, தோழியின் செயல்பாடு. தலைவனுடன் அவர்களுக்குள்ள பழக்கம் இவற்றைக் கடந்து கூர்ந்து கவனிப்பது தாயின் கடமையாகிறது. அந்த கடமையைச் செய்யாதொழிந்த தாயின் அறியாமையிலேயே தலைவி உடன்போக்கு மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

"உடன்போக்குத் துறைப்பற்றி வரும் பாடல்களையெல்லாம் ஒரு சேரத் தொகுத்து நோக்கினால் அப்போக்கிற்குத் தாயே முதற்காரணமாவாள் என்பது தெள்ளதின் புலனாகும்"

*(நா. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள்., ப.215)* என்று நகப்பு ரெட்டியார் என்பாரின் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது.

**செவிலியின் தவிப்பு**

தலைவியைப் பேணி வளர்த்த செவிலித்தாய் உள்ளம் பெரிதும் வேதனைப்பட்டு வருந்துகின்றாள். "காதலைத் தான் புரியாமற் போன மடந்தை நான்சுசு என்று செவிலித்தாய் உணவும் மறுத்துப்பு புலம்பித் தவிக்கின்றாள்.

***"அந்த நீளிடையவனொடு போகிய***
***முத்தேர் வெண்பல் முகிழ்நகை மடவரல்***
***தாயர் என்னும் பெயரே வல்லா***
***நெடுத்தேன் மன்ற யானே***
***கொடுத்தோர் மன்ற, அவளாயத் மூதாரே"***

***(ஐங். 380)***

இப்பாடலில் "பெயர் மட்டும் தாய் என்று எடுத்தேன். அதற்குரிய மகட்கொடுத்து மகிழும் மகிழ்வைப் பெற்றிலேன். ஆனால் தலைவியே, தலைவனோடு சென்று மணம் பெற்று வாழ்க என்று மகிழும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆயத்தாரோ ஆவர் என்கிறார்.

"மகளைப் பிரிந்த துன்பமும், அவர் பற்றிய மான உணர்ச்சியும், தொல்லை செய்தலை அன்னை ஆயத்தார்பாலும், தோழியின் மேலும் இடம் பெயர்த்துக் கொள்கிறாள்"

*(து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல்., ப. 196)*

என்று சிவராஜ் என்பார் கூறும் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**அலரை நம்ப மறுத்தல்**

தலைவி தலைவனுடன் சென்று விட்டால் பெண்டீர் அலர் தூற்றுவர் என்றும், இவ்ஊர் நரகம் என்றும், இந்நரகத்தில் இழிந்த இயல்புடைய பெண்கள் இன்னாத சொற்களைக் கூறுவது இயல்பு. இதனை

**"இவ்வூவர் நிரையப் பெண்டீர் இன்னா கூறுவ**
**புரைய அல்ல, என் மகட்கு என வரை இ"**
***(அகம் 95)***

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

பெரும்பான்மையாக ஊரலர் கேட்டு மகளை அலைக்கும் தாயை அறிமுகப்படுத்தும் சங்க இலக்கியம், ஊரார் கூறும் அலர் மொழியை நம்ப மறுக்கும் தாயையும் படைத்துக் காட்டியுள்ளது.

**செவித்தாய் தலைவனைப் பழித்தல்**

தலைமகள் தலைவனுடன் சென்று விட்டதை எண்ணி, தம் மகளுடைய சிலம்பொலிக்கும் சிறிய அடிகள், அச்சுர வழியில் நடக்க முடியுமோ என வருந்தி தலைவன் அன்பில்லாதவன் எனப் பழித்துக் கூறுகிறாள். இதனை,

**"நொதுமலாளன் நெஞ்சு அறப்பெற்ற என்**
**சிறு முதுக்குறைவி சிலம்பு ஆர் சிறடி**
**வல்லக்கொல், செல்லத் தாமே"**
***(அகம் 17)***

எனும் பாடல் எடுத்துரைக்கிறது.

செவிலித்தாய், தான் அருமையாக வளர்த்த என் மகளைக் கொண்டேயாகிய காளையர்களை அறனிலாளனி, ஏதிலாளன், நொதுமலாளன் என இகழ்ந்துரைக்கும் தாயின் மனநிலையைக் காணமுடிகிறது.

**"ஏதிலன் பொய்மொழி நம்பி, ஏர் வினை**
**வளம் கெழு திருநகர் புலம்பப் போகி**
**சிலம்பு நக இயலிச் சென்று மகட்கே**
**கொய்கை சூழ்ந்த பொய்ய யாணர்"**
***(அகம் :117)***

என்ற பாடலின் வழி, தலைவனின் பொய் மொழியே உண்மையென நம்பி அவனுடன் சென்று விட்டாள். சென்ற இடமோ, அச்சம் தரும் வழிகளை உடைய பாலை நிலமாகும். பொய் மொழிகளைக் கூறி ஏமாற்றித் தன் மகளை அழைத்துச் சென்று விட்டான் என்று எண்ணித் தாய் வருந்தும் நிலையை அறிய முடிகிறது.

"பெற்றோர் குடும்பத்தின் மதிப்பையும், சமூகத்தின் நடைமுறை விதிகளையும் பொருட்படுத்தவும், இளம்பெண்கள் அவை பற்றியெல்லாம் சிந்தியாது தம் காதலொன்றினையே பொருட்படுத்தி தம் நலம், நாடும் தாயையும் வெறுக்கும் மன நிலையினராகும் நிலையைச் சங்க இலக்கியம் நன்கு சித்தரித்துக் காட்டியுள்ளது. (ரா. நடராசன் (உரை), அப்பர் தேவாரம் 6ம் திருமுறை செய்யுள் 25) என்ற தட்சிணாமூர்த்தி என்பார் கூறும் கருத்து இங்கு கருததக்கது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் செவிலி என்பாள் தாய்க்கு இணையாகக் கருதப்படுகிறது. தலைவிக்கு தோழியாகவும் திகழ்வதை உணர முடிகிறது. தவைனைத் பழித்துரைப்பவளாகவும் இடித்துரைப்பவளாகவும் திகழ்கிறாள். தலைவன் தலைவியின் அன்பு வாழவுக்குப் பாலமாக விளங்குவதை இக்கட்டுரை அமைகிறாள்.